
**ஜூலை – 11**

# TNPSC துளிகள்

- ❖ பிரபல கல்வெட்டியல் நிபுணர் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான V. வேதாச்சலத்திற்கு தமிழ் விக்கி சூரன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ❖ தமிழ்நாடு மாநில அரசு தொல்பொருள் துறையானது (TNSDA), ஏழு தொல்பொருள் தளங்களிலிருந்து அகழ்ந்தகெடுக்கப்பட்ட சுமார் 23 கரி மாதிரிகளை, துகள் முடுக்கி மூலமான திரள் நிறமாலை (AMS) என்ற நுட்பத்தினைப் பயன்படுத்தி காலக் கணிப்பு மேற்கொள்வதற்காக வேண்டி அமெரிக்காவில் உள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகத்திற்கு அனுப்பியுள்ளது.
- ❖ ஹரியானா மாநில அரசானது, பசுமையான சுற்றுலா மற்றும் வனவிலங்குகள் வளங் காப்பினை மேம்படுத்துவதற்காக ஆரவல்லி மலைக் குன்றுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் வகையிலான ஆசியாவின் மிகப்பெரியப் பூங்காவினை உருவாக்கி வருகிறது.
- ❖ ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற 17வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், உலகளாவிய நிர்வாகம், அமைதி, பாதுகாப்பு மற்றும் சீர்திருத்தத்தை மேம்படுத்துவதற்கான 126 உறுதிமொழிகளுடன் கூடிய ஒரு மிகவும் விரிவான பிரகடனத்தில் உலக நாடுகளின் தலைவர்கள் கையெழுத்திட்டனர்.
    - ○ இந்த உச்சி மாநாடானது, "Peace and Security and Reform of Global Governance" என்ற கருத்துருவில் நடைபெற்றது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உயர்வுக்குப் படி திட்டம்




- ❖ உயர்வுக்குப் படி திட்டம் ஆனது சுமார் 77,752 மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற உதவியது.
- ❖ நான் முதல்வன் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பின் கீழ் 41.38 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் சுமார் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பயிற்சியைப் பெற்று உள்ளனர்.
- ❖ கல்லூரிக் கனவுத் திட்டம் ஆனது, 2025–26 ஆம் ஆண்டில் 81,149 பேர் உட்பட 2022 ஆம்

ஆண்டு முதல் 1.87 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பலனளித்துள்ளது.

- மொத்தம் 29 அரசு பொறியியல் கல்லூரிகளில் 30.17 கோடி ரூபாயில் திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

## திட்டக் குழுவின் 4 அறிக்கைகள் 2025 – தமிழ்நாடு

- மாநில திட்டக் குழுவானது பல்வேறு பிரிவுகள் குறித்த நான்கு மிகவும் விரிவான அறிக்கைகளை முதலமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.
- அவையாவன;
    - தமிழ்நாட்டில் உள்ள சுரங்கங்களை வரைபடமாக்குதல் - அவற்றின் மறுசீரமைப்பு திறனுக்கான சாத்தியக் கூறுகளை மதிப்பிடுதல்'
    - குழந்தைகளின் ஊட்டச்சத்து - முக்கியச் சவால்கள் மற்றும் உத்திகள்
    - நகர்ப்புற மேம்பாடு மற்றும் வெப்பநிலை ஈடுசெய்தல் இழப்பு நிலை : தமிழ் நாட்டில் கட்டமைக்கப் பட்டப் பகுதி மற்றும் பருவநிலை சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளின் தசாப்த கால மதிப்பீடு.
    - தமிழ்நாட்டின் இரண்டாம் நிலை/மட்ட நகரங்களில் மேம்படுத்தப் பட்ட நகர்ப்புற மீள்தன்மைக்கான இயற்கை அடிப்படையிலான பல்வேறு தீர்வுகளுக்கான பணி - கட்டமைப்பு அறிக்கை





# சர்வதேசச் செய்திகள்

## 3,500 ஆண்டுகள் பழமையான நகரம் பெனிகோ – பெரு

- பெருவின் பாரன்கா மாகாணத்தில் 3,500 ஆண்டுகளுக்கும் முந்தைய பண்டைய கால நகரமான பெனிகோவை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பசிபிக் கடற்கரைச் சமூகங்களை ஆண்டிஸ் மற்றும் அமேசான் ஆகிய படுகையுடன் இணைக்கும் ஒரு உத்தி சார் வர்த்தக மையமாக பெனிகோ செயல்பட்டது.
- இந்தத் தளத்தில் பல்வேறு சடங்குக் கோயில்கள் மற்றும் களிமண் சிற்பங்கள் மற்றும் மணிகளாலான அணிகலன்கள் /கழுத்தணிகள் போன்ற கலைப்பொருட்கள் கொண்ட குடியிருப்பு வளாகங்கள் உட்பட 18 கட்டமைப்புகள் உள்ளன.
- பெனிகோ நகரானது அமெரிக்காவில் அறியப்பட்ட மிகப்பெரும் பழமையான கேரல்

நாகரிகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

- இது 5,000 ஆண்டுகளுக்கு முன்பு பெருவின் சூப் பள்ளத்தாக்கில் செழித்து வளர்ந்த ஒரு நாகரிகமாகும்.




## புதிய மேம்பாட்டு வங்கியில் கொலம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தான்




- கொலம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய இரு நாடுகளானது புதிய மேம்பாட்டு வங்கியில் (NDB) அதிகாரப்பூர்வமாக இணைந்துள்ளன.
- இது NDB வங்கியின் உறுப்பினர் நாடுகளின் எண்ணிக்கையினை 11 ஆக விரிவுபடுத்தி உள்ளது.
- இந்த NDB வங்கியில் தற்போதுள்ள உறுப்பினர்களில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா, வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து, அல்ஜீரியா, கொலம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகியவை அடங்கும்.

- NDB ஆனது பிரிக்ஸ் நாடுகள் மற்றும் பிற வளர்ந்து வரும் நாடுகளில் உள்கட்டமைப்பு மற்றும் நிலையான மேம்பாட்டினை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த வங்கியானது 2015 ஆம் ஆண்டில் பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி திரட்டுவதற்காக பிரிக்ஸ் நாடுகளால் நிறுவப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## வால் நட்சத்திரம் 3I/ATLAS

- நாசாவானது அதன் அதிபரவளைய மற்றும் புவிக்குத் திரும்ப இயலாத ஒரு சுற்றுப்பாதையால் நன்கு உறுதிப்படுத்தப் பட்ட 3I/ATLAS எனப்படும் ஒரு புதிய விண்மீன் மண்டல வால் நட்சத்திரத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இந்தக் கண்டுபிடிப்புக்கு முந்தையப் படங்கள் ஆனது உலகெங்கிலும் உள்ள ATLAS ஆய்வகங்கள் மற்றும் கால்டெக்கின் ஸ்விக்கி மாறுநிலை பேரண்ட ஆய்வு மையத்தில் இருந்து (டிரான்சியன்ட்) பெறப்பட்டன.
- இந்த வால் நட்சத்திரத்தின் பாதையானது அது சூரிய மண்டலத்திற்கு அப்பால் இருந்து தோன்றியதைக் காட்டுகிறது.
- இது சுமார் 1.8 வானியல் அலகுகளுக்கு (சுமார் 170 மில்லியன் மைல்கள் அல்லது 270 மில்லியன் கிலோமீட்டர்கள்) அப்பாலான தொலைவில் உள்ளதால் பூமிக்கு எந்த ஒரு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாது.
- இந்த 3I/ATLAS என்பது 'ஓமுவாமுவா மற்றும் 2I/போரிசோவ்' ஆகியவற்றிற்குப் பிறகு, விண்மீன் மண்டலத்தில் அறியப்பட்ட மூன்றாவது பொருள் ஆகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## செய்ன் நதியில் கழிவுநீர் கலப்பு பிரச்சனை – பிரான்ஸ்

- பாரீஸ் நகர நிர்வாகமானது, 1923 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நூற்றாண்டு காலக் கழிவுநீர் மாசுபாடு பிரச்சினைக்குப் பிறகு முதல் முறையாக செய்ன் நதியில் பொது மக்கள் நீச்சல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மீண்டும் அனுமதித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளின் கீழ் திறந்த கள நீர் சாகசப் போட்டிகள் நடத்தப் படுவதற்காக இந்த நதியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் காரணமாக சுத்தம் செய்யும் நடவடிக்கை தொடங்கப் பட்டது.
- இந்நகரத்தின் பழைய கழிவுநீர் அமைப்பு ஆனது, கனமழையின் போது சுத்திகரிக்கப்

படாத கழிவுகள் இந்த ஆற்றில் பெருக்கெடுத்து ஓட வழி வகுத்தது இதனால் ஈ கோலி பாக்டீரியாக்கள் ஆபத்தான அளவில் அதிகரித்தன.




## பெதியா டிப்ருகர்ஹென்சிஸ்




- அசாமின் திப்ருகர் அருகே பிரம்மபுத்ரா நதியில் பெதியா டிப்ருகர்ஹென்சிஸ் எனும் ஒரு புதிய வகை நன்னீர் வாழ் மீன் இனமானது அடையாளம் காணப்பட்டுள்ளது.
- அசாமில் உள்ள திப்ருகர் மாவட்டத்தில் அது கண்டறியப்பட்டதன் காரணமாக இந்த மீன் இனத்திற்கு இந்தப் பெயர் வழங்கப்பட்டுள்ளது.
- இந்த இனமானது சைப்ரினிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

- இந்த மீன் இனமானது, உடலில் சற்று மேல்நோக்கி மற்றும் கீழ்நோக்கி நீண்டுள்ள அதன் வால் அருகே அமைந்துள்ள ஒரு தனித்துவமான கருப்புப் புள்ளியால் வகைப் படுத்தப் படுகிறது.

## உலக வறட்சி அபாயப் பகுதிகள் 2023-2025

- பாலைவனமாக்கலை எதிர்கொள்வதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு (UNCCD) மற்றும் அமெரிக்காவின் தேசிய வறட்சித் தணிப்பு மையத்தின் (NDMC) அறிக்கையானது 2023 முதல் 2025 ஆம் ஆண்டு வரையில் உலகளாவிய வறட்சி அபாயப் பகுதிகள் தீவிரமடைவதை எடுத்துக்காட்டுகிறது.
- கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்காவில் சுமார் 90 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான பட்டினி நிலையை எதிர்கொள்கின்றனர்.
- ஜிம்பாப்வேயின் மக்காச்சோள பயிர் இழப்புகள் 70% அளவினைத் தாண்டியுள்ளன.
- சாம்பியாவின் ஜாம்பேசி நதியின் ஓட்டம் ஆனது அதன் நீண்டகாலச் சராசரியில் 20% ஆகக் குறைந்தது.
- ஸ்பெயினின் ஆலிவ் எண்ணெய் உற்பத்தி இரண்டு ஆண்டுகளில் சுமார் 50% குறைந்து, ஐரோப்பா முழுவதும் விலை ஏற்றத்தைத் தூண்டியது.
- பனாமா கால்வாய் வறட்சியானது தினசரிக் கப்பல் போக்குவரத்தை சுமார் 38 என்ற எண்ணிக்கையிலிருந்து 24 ஆகக் குறைத்துள்ளது.
- எத்தியோப்பியாவில் குழந்தைத் திருமணங்கள் இரட்டிப்பாகின என்பதோடு மேலும் வறட்சி காரணமாக ஜிம்பாப்வேயில் பெருமளவில் பள்ளி இடை நிற்றல் பதிவாகின.
- இந்தியாவின் கோதாவரி மற்றும் கிருஷ்ணா போன்ற இரு நதிப் படுகைகள் மீண்டும் மீண்டும் வறட்சியை எதிர்கொள்கின்றன என்ற நிலையில் அரிசி மற்றும் சர்க்கரை உற்பத்தி குறைவதால் உணவுப் பொருட்களின் விலை பணவீக்கம் உயர்கிறது.
- வறட்சிப் பாதிப்புகள் ஆனது மகாராஷ்டிரா, இராஜஸ்தான் மற்றும் கர்நாடகாவில் விவசாயிகளைத் துயர நிலைக்குத் தள்ளி இடம் பெயரவும் செய்தது.




FIG.2 List of countries declaring drought emergencies (2022-2023)

## டெக்சாஸ் திடீர் வெள்ளம் – அமெரிக்கா

- மோசமான திடீர் வெள்ளம் ஆனது டெக்சாஸ் மாகாணத்தினைத் தாக்கியது.
- இந்த திடீர் வெள்ளமானது சான் அன்டோனியோவிற்கு அருகிலுள்ள கெர் கௌண்டி என்ற நகரில் ஒரு பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

- அப்பகுதியில் உருவான ஒரு வலுவானப் புயல் இரவு முழுவதும் சுமார் 12 அங்குல (30 செ.மீ) மழைப் பொழிவினை ஏற்படுத்தியது.
- குவாடலூப் நதியின் நீர் மட்டம் 26 அடி (8 மீட்டர்) உயர்ந்தது.




## சோஹ்ராவில் மழைப் பொழிவில் வீழ்ச்சி




- உலகின் மிக ஈரப்பதமான இடமாக அறியப்படும் மேகாலயாவில் உள்ள சோஹ்ராவில் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சுமார் 1,095.4 மில்லி மீட்டர் மழைப் பொழிவு மட்டுமே பதிவானது.
- இது கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் பதிவான மழைப் பொழிவில், அதாவது 3,041.2 மில்லி மீட்டர் அளவின் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.
- இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) ஆனது இதனை இந்தப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கடுமையான மழைப் பொழிவு அளவின் வீழ்ச்சிகளில் ஒன்றாகக் கூறியது.

- 2005 ஆம் ஆண்டிலிருந்து, சோஹ்ரராவின் வருடாந்திர மழைப்பொழிவானது இயல்பை விட 11,000 மிமீ குறைவாக சுமார் 8,000 மிமீ முதல் 9,000 மிமீ வரையிலான அளவில் பதிவாகியது.
- 1974 ஆம் ஆண்டில், சோஹ்ரா பகுதியில் ஓராண்டில் சுமார் 24,555 மிமீ மழைப் பொழிவு பதிவாகி உலக சாதனையாக அமைந்தது.
- தற்போதைய வருடாந்திரச் சராசரியானது தற்போது அந்தச் சாதனையில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே ஆகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 3வது உலகளாவிய டிராக்சன் அறிக்கை





- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் (H1) நிதி சார் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவன நிதியளிப்பில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- இந்தத் துறையானது 889 மில்லியன் டாலர் நிதியைத் திரட்டியது என்பதோடு இது 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் திரட்டப்பட்ட 936 மில்லியனிலிருந்து 5 சதவீதமும், 2024 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் 1.2 பில்லியன் டாலரை விட 26 சதவீதமும் குறைவாகும்.
- மொத்த நிதியில் பெங்களூரு 55% உடன் முன்னிலை வகித்தது, அதைத் தொடர்ந்து 14 சதவீதப் பங்குடன் மும்பை இடம் பெற்றுள்ளது.
- அமெரிக்காவில் உள்ள ஆக்செல் நிறுவனம் ஆனது 34 ஒப்பந்தங்களுடன் ஒட்டுமொத்த முதலீட்டுச் சுற்றுகளில் முன்னிலை வகித்தது; ப்ளூம் வென்ச்சர்ஸ் அதன் தொகுப்பு முதலீட்டில் 7 புதிய புத்தொழில் நிறுவனங்களை சேர்த்தது.

## 2024 ஆம் ஆண்டில் உயிரி எரிபொருள் பயனர்கள்

- 2024 ஆம் ஆண்டில் உயிரி எரிபொருள் நுகர்வில் இந்தியா சீனாவை முந்தி, உலகளவில் நான்காவது பெரிய பயனராக மாறியுள்ளது.
- நாட்டின் உயிரி எரிபொருள் பயன்பாடு ஆனது ஓராண்டில் 40% உயர்ந்தது.
- அதிக நுகர்வு இருந்தபோதிலும், இந்தியாவானது சீனாவை விட குறைவான உயிரி எரிபொருளையே உற்பத்தி செய்கிறது.
- ஆசியா பசிபிக் பகுதியானது உயிரி எரிபொருள் நுகர்வு வளர்ச்சியில் முன்னணியில்

உள்ளதுடன் உயிரி எரிபொருட்களுக்கான உலகளாவியத் தேவையில் புதிய உச்சத்தை எட்டியுள்ளது.

- உலகளவில் புதைபடிவ எரிபொருள் பயன்பாடு அதிகமாக உள்ளது என்றும், 2024 ஆம் ஆண்டில் கார்பன் உமிழ்வு தொடர்ந்து மிகவும் அதிகரித்து வருவதாகவும் நிபுணர்கள் எச்சரித்தனர்.




## வடகிழக்குப் பிராந்திய மாவட்டங்களின் SDG குறியீடு (2023–24)


| State | District | Score | Rank |
|---|---|---|---|
| Mizoram | Hnahthial | 81.43 | 1 |
| Mizoram | Champhai | 79.86 | 2 |
| Tripura | Gomati | 78.79 | 3 |
| Nagaland | Mokokchung | 78.43 | 4 |
| Tripura | West Tripura | 77.64 | 5 |
| Nagaland | Kohima | 76.93 | 6 |
| Tripura | South Tripura | 76.71 | 7 |
| Sikkim | Gangtok | 76.64 | 8 |
| Mizoram | Kolasib | 76.50 | 9 |
| Nagaland | Dimapur | 76.29 | 10 |

- 2023–24 ஆம் ஆண்டிற்கான வட கிழக்குப் பிராந்திய மாவட்டங்களின் நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDG) குறியீட்டின் இரண்டாவது பதிப்பு ஆனது நிதி ஆயோக் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீடு ஆனது SDG குறிகாட்டிகளில் எட்டு வடகிழக்கு மாநிலங்களில் உள்ள 121 மாவட்டங்களின் முன்னேற்றத்தை அளவிடுகிறது.
- முந்தைய பதிப்பை விட சுமார் 85% மாவட்டங்கள் இந்தக் கூட்டு மதிப்பெண்களில் ஒரு அதிகரிப்பைக் காட்டின.
- மிசோரம், சிக்கிம் மற்றும் திரிபுராவின் அனைத்து மாவட்டங்களும் ஒரு முன்னணி அந்தஸ்தைப் பெற்றன.
- மிசோரமில் உள்ள ஹனாதியல் சிறப்பான செயல் திறன் கொண்ட ஒரு மாவட்டமாக உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள லாங்டிங் மிகக் குறைந்த மதிப்பெண் பெற்ற ஒரு மாவட்டம் ஆகும்.

- நாகாலாந்து மாநிலமானது, அதன் 3 மாவட்டங்களுடன் சேர்த்து முதல் 10 செயல்திறன் கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- சிக்கிம் அதன் மாவட்டங்களில் மிகக் குறைந்த மதிப்பெண் இடைவெளியுடன் மிகவும் நிலையான செயல்திறனைக் கொண்டிருந்தது.
- இப்பிராந்தியம் முழுவதும் 93 மாவட்டங்களில் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு ஆகிய பிரிவுகளில் மேம்பட்ட மதிப்பெண்கள் பதிவாகின.
- இந்த பிராந்தியத்தில் எந்த மாவட்டமும் சாதனை மாவட்டமாகவோ அல்லது சாதனை நிலையை எட்டும் நோக்கமுள்ள மாவட்டங்கள் பிரிவிலோ இணையவில்லை.

# மாநிலச் செய்திகள்

## நிபா வைரஸ் பெருந்தொற்று 2025




- கேரளாவில் இரண்டு உறுதிப்படுத்தப்பட்ட பாதிப்புகளுடன் நிபா வைரஸ் தொற்று மீண்டும் ஏற்பட்டுள்ளது.
- நிபா வைரஸ் (NiV) ஆனது முதன்மையாக விலங்குகளிடமிருந்து, மிக குறிப்பாக பழம் உண்ணும் வௌவால்களிலிருந்து, பழங்கள் அல்லது உலர்த்தப்படாத பேரீச்சம்பழச் சாறு போன்ற பாதிக்கப்பட்ட உணவு மூலம் மனிதர்களுக்கு பரவுகிறது.
- பன்றிகள் போன்ற பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நேரடியாக தொடர்பு கொள்வது இந்தியாவில் குறைவாகவே காணப்படுகிறது என்றாலும் அது வைரஸ் பரவுவதற்கான சாத்தியமான வழியாகவே உள்ளது.

## திறன் மிகு கொசு கண்காணிப்பு அமைப்பு

- மழைக்காலத்தில் கொசுப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்காக என்று ஆந்திரப் பிரதேச மாநில அரசானது திறன் மிகுந்த கொசு கண்காணிப்பு அமைப்பு (SMoSS) என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்த திட்டமானது விசாகப்பட்டினம், விஜயவாடா, காக்கிநாடா, இராஜமஹேந்திர வரம், நெல்லூர் மற்றும் கர்னூல் ஆகிய ஆறு நகரங்களில் 66 இடங்களில் செயல்பட உள்ளது.
- இந்த அமைப்பானது கொசு வகைகள், எண்ணிக்கைகள் மற்றும் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் போன்ற வானிலைச் சூழல்களை நன்கு கண்காணிப்பதற்காக செயற்கை

நுண்ணறிவு (AI), இணைய உலக அமைப்பின் (IoT) உணர்வுக் கருவிகள் மற்றும் சில ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துகிறது.

- ஆளில்லா விமானங்கள் ஆனது குறைந்த நேரத்தில் குறைந்த இரசாயனங்கள் மற்றும் குறைந்த செலவில் கொசுக்களைக் கொல்லும் இரசாயனங்களை மிகவும் வேகமாக தெளிக்கும்.
- ஒரு நேரடி முகப்புப் பக்கமானது, விரைவான மற்றும் தெளிவான கண்காணிப்புக்காக ஒரு மைய அமைப்புக்கு நிகழ்நேர தரவைக் வழங்கும்.




## முக்கிய மந்திரி பிருந்தாவன் கிராம யோஜனா




- மத்தியப் பிரதேச மாநில அமைச்சரவையானது சுயசார்பு கிராமப்புற மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காக வேண்டி முக்கிய மந்திரி பிருந்தாவன் கிராம யோஜனா என்ற திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் 2,000 மக்கள்தொகை மற்றும் குறைந்தது 500 கால்நடைகளைக் கொண்ட ஒரு கிராமம் இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்.
- இந்தக் கிராமங்களானது, தன்னிறைவு கொண்ட மற்றும் முழுமையான மேம்பாட்டின்

மாதிரிகளாகச் செயல்படும் பிருந்தாவன் கிராமங்களாக மேம்படுத்தப்படும்.

- பசு வளர்ப்பு, பால் பண்ணை மேம்பாடு, இயற்கை வேளாண்மை, சூரிய சக்தி, நீர் வளங் காப்பு, மேய்ச்சல் நிலத்தின் மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கிராமப்புறத்தில் தொழில்முனைவு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் கவனம் செலுத்தப்படும் துறைகளில் அடங்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★